23rd January 1961]

SRI S. M. ANNAMALAI : ஸார், ஜாதி மத பேதமற்ற சர்க்கார் என்று சொல்லப்படும் ஒரு சர்க்கார், ஒரு மதத்திற்கு என்று மட்டும் இருக்கின்ற இம்மாதிரிப்பட்ட காரியங்களுக்கு உதவி செய்வதற்கு முன் வரலாமா? அப்படியானால் இதே போன்று மற்ற எல்லா மதத்தினருக்கும் உதவி செய்ய சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : ராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகள்பற்றி சொல்வது மதத்தை போதிப்பதற்காக அல்ல, ஒழுக்கத்தைப்பற்றியுள்ள எண்ணத்தைப் பரப்புவதற்குத்தான்.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, தமிழர்களுடைய நாகரீமும், மறுமலர்ச்சியும் கம்பராமாயணத்தில்தான் இருக்கின்ற காரணத்தினால், இது போன்ற உபந்நியாசங்களை நடத்த வலியுறுத்தவேண்டும் என்பதோடு மட்டுமல்ல, பெரிய புராணத்தையும் இதில் சேர்க்கவேண்டும் என்று சர்க்கார் ஆலோசனை கூறுமா?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு அண்ணாமலை நீங்கள் பதில் சொல்லுகிறீர்களா?

Office of the Inspector-General of Prisons

* 97 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the rent per month paid to the Krishna Vilas, Vepery, Madras, wherein the office of the Inspector-General of Prisons is located; and

(*b*) the basis on which the rent was fixed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 1,125;

(*b*) The fair rent was fixed by the Third Assistant Judge of the City Civil Court in accordance with the provisions of section 4 of Madras Buildings (Lease and Rent Control) Act (Act XXV of 1949).

SRI M. KALYANASUNDARAM : ஸார், இதற்கு முன்பு இந்த அலுவலகம் எந்த இடத்தில் இருந்தது? இப்போது இந்தப் புதிய கட்டிடத்திற்கு மாற்றவேண்டிய காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு முன்பு ஃபஸ்ட் லைன் பீச்சிலுள்ள கட்டிடத்தில் நம்பர் 2 நார்த் பீச் போலீஸ் ஸ்டேஷனும், ஃபஸ்ட் ஃப்ளோரில் இந்த அலுவலகமும் இருந்தது. அதில் ஒன்பது பேர் (ப்ரொபேஷனர்ஸ்) இருந்து வேலை செய்ய வேண்டியிருந்தது. அவர்களுக்கு அங்கு இட வசதி குறைவாக இருந்ததினால், அவர்கள் தனித் தனி வீடுகளில் தங்கள் அலுவலகத்தை வைத்துக்கொள்ளவேண்டியிருந்தது. இதற்காக வாடகை வகையில் 1,620 ரூபாய் கொடுக்க வேண்டியிருந்தது. அதோடு சரியான முறையில் வேலை செய்வதற்கும் வசதியில்லாமல் இருந்தது. மேலும் ரயில் டிராபிக் போன்ற நெருக்கடியினாலும்

TRUTH ALONE TRIUMPHS

பல கஷ்டங்கள் இருந்தன. ஆகவே இன்ஸ்பெக்டர் ஜெனரல் பத்தாயிரம் சதுர அடி இடம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்குப் பின்னால் இதை எடுத்துக்கொண்டோம்.

9-00 a.m. **Sri M. KALYANASUNDARAM** : இந்த இடத்தில் மட்டும் அல்ல அலுவலகம் போதாமல் இருப்பது. மவுண்டுரோடு கோன் ஹோமிலும் இருக்கிறது. அதற்குத் தனியாக வாடகை கொடுக்கப்பட்டு வருகிறது என்று அறிகிறேன். மலபார், ஆந்திரா எல்லாம் சேர்ந்து இருந்த காலத்தில் இவ்விடத்திலேயே ஆபீஸ் நடந்திருக்கிறது. ராஜமகேந்திரம், கன்னனூர் முதலிய இடம் எல்லாம் பிரிந்த பிறகும் போதவில்லை என்று சொல்வதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த ராஜ்யம் பிரிந்த பிறகு இருந்த நிலைமையைத்தான் விளக்கினேன். ஒன்பது ப்ரொபேஷனர் ஆபீசர்கள் தங்க இடம் இல்லாமல் தங்கள் தங்கள் வீடுகளிலேயே காரியாலயத்தை வைத்துக்கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது, இடம் போதவில்லை என்ற காரணத்திற்காகத்தான் மாற்றவேண்டியிருக்கிறது.

Sri A. A. RASHEED : Sir, will the Government consider the question of having their own building to locate this office?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : That would depend on the finance available for incurring the necessary expenditure.

“ Katcha Theevu ”

* 98 *Q*.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether this Government have received any report from the Fisheries Department, regarding the Ceylon Police threatening the inhabitants of ‘ Katcha Theevu ’ near Rameswaram; and

(*b*) if so, whether the Government will place the report on the table of the House.

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) a statement[a] is laid on the table of the House.

(*b*) The Government do not consider it necessary to place the reports received by them on the table of the House.

Sri N. K. PALANISAMI : சிலோன் போலீசாரின் அத்துமீறிய நடவடிக்கைபற்றி இந்திய சர்க்கார் மூலமாக நம் சர்க்கார் ஏதாவது குறிப்பு அனுப்பினார்களா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? மீனவர்களுக்கு இந்த மாதிரி கஷ்டம் மறுபடியும் ஏற்படாதிருக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்கான நடவடிக்கைகள் மத்திய சர்க்கார் மூலமாகவே எடுக்கப்படுகிறது. இதிலே கச்சா தீவு யாருக்குச் சொந்தம் என்பதில் சிறிது சந்தேகம் ஏற்பட்டு

---

a Printed as Appendix II on pages 351–352 infra.